மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது போன்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்பொழுது இல்லை.

(ஆ) மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும் விவசாயத்திற்கு ஒப்படை வழங்குவதற்கு அரசாணை நிலை எண். 1168, வருவாய், நாள் 25-7-1989-இல் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, உறுப்பினர் குறிப்பிட்டுள்ள கொடைக்கானல் பகுதியில் விவசாயத்திற்கு நில ஒப்படை வழங்க இயலாது. வீட்டுமனையைப் பொறுத்த வரையில் ஆக்கிரமிப்பில் உள்ள இடம் தன்மையைப் பொறுத்து, தகுதியின் அடிப்படையில் விதிகளின்படி ஒப்படை வழங்கப்படும்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மேல்மலைப் பகுதியிலும், கீழ் மலைப் பகுதியிலும் நிலமற்ற ஏழை விவசாயிகள் அரசு புறம்போக்கு நிலங்களை ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா என்று வைத்து, 10, 12 ஆண்டுக் காலமாக சொந்தமாக விவசாயம் செய்தும், அதே இடத்தில் குடியிருப்பு வீடுகளைப் போட்டும் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 10, 12 ஆண்டுக் காலமாக பட்டாக்கள் வழங்கவேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தும், கடந்த கால ஆட்சியில் பட்டாக்கள் வழங்கப்படவில்லை, இந்த அரசு அந்த ஏழை எளிய மக்களுக்குப் பட்டாக்கள் வழங்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்த அரசு முன் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தக்காவிக் கடன்கள்.

*4398—திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1979 ஆம் ஆண்டே ரத்து செய்யப்பட்டதாக அரசு அறிவித்த தக்காவிக் கடன்களை திரும்ப வசூலிக்க விவசாயிகள் மீது நடவடிக்கை எடுத்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், முன்பு அறிவித்ததை அரசு அமுல்படுத்துமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1979 ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்ட தக்காவிக் கடன்கள் திரும்ப வசூலிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

9-25 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தக்காவிக் கடன்கள் ரத்து செய்யப்பட்டன என்றும், அதைத் திரும்ப வசூலிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததற்கு நன்றி. ஆனால் அப்படி 1979 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டதற்குப் பிறகும், புதுக்கோட்டை மாவட்டத்திலே அந்தத் தக்காவிக் கடன்களை வசூலிப்பதற்கு வருவாய்த்துறை மூலமாக விவசாயிகள் நெருக்கப்படுகிறார்கள் அல்லது வசூலிக்க நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்ற முறையீடு வந்ததன் காரணத்தால் தான் இந்தக் கேள்வியை நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். அப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அதை நிறுத்துவதற்கு அரசு அறிவிக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் அரசுக்கு இதுவரை கிடைக்கவில்லை. ஏற்கெனவே சில சலுகைகளை நாம் வழங்கியிருக்கிறோம். அதன் விளைவாக ரூ.7.33 கோடி கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் 9,30,856 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். புதுக் கோட்டையைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. அவர் தகவல் தந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்பில் பயன் பெற்றவர்களை பற்றிச் சொன்னார்கள். அப்படி அறிவிக்கப்பட்டதற்குப் பிறகும்கூட, தக்காவிக் கடன்கள் கொடுக்கப்பட்டன. நிலுவையில் இருப்பதாக அரசின் கணக்கில் இருக்கிறதா? அப்படியிருந்தால் அது எவ்வளவு தொகை என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருப்பதாக எனக்கு நினைவு இல்லை. தகவலும் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தக்காவிக் கடன் என்பது வறட்சி வருகின்ற நிலைமைகளுக்கேற்ப அரசாங்கம் அளிக்கின்ற சலுகை. ஆனால் தற்சமயம் 50 விழுக்காடுகள் வரை விளை பொருட்கள் விளைந்திருக்குமென்றால் அந்த இடங்களில் விவசாயிகள் விளைபொருட்களை இழக்க நேரிடுகிறது. ஆனால் சில வருவாய்த்துறை அதிகாரிகள் உண்மையான நிலைமையில் வறட்சி முழுமையாக ஏற்பட்டிருந்தாலும் கூட, அரசுக்கு இழப்பு ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தவறான தகவலை இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உண்மையிலே வறட்சியிருக்கின்ற இடங்களை மறு ஆய்வு செய்வதற்கு இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர்கள் உத்தரவு வழங்குவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரவு வழங்கப்படும்.

நீர் வரி.

5985—திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடை யளிப்பாரா :

(அ) ஏரி மற்றும் அணைக்கட்டுகளில் இருந்து நீர்ப் பாசனம் பெறும் நிலங்களுக்கு நீர்வரி முழுமையாக வசூலிக் கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தருமபுரி மாவட்டத்தில் நீர்வரி வசூலிக்கப்படும் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் நீர்வரி வசூலிக்கப்படும் மொத்த நிலப்பரப்பு 8372.98.5 ஹெக்டேர் ஆகும்.